ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X

புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023

SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# பெருமாள்முருகனின் கோழையின்பாடல்கள் கவிதைத்தொகுப்புக்குள் வளைந்து நெளிந்தோடும் பின்நவீனத்துவக் கோட்பாட்டுக் கூறுகள்

*முனைவர் இரா.இரவி,*
*தமிழ்த்துறைத் தலைவர்,*
*அறிவியல் மற்றும் கலையியல் கல்லூரி,*
*எஸ்.ஆர்.எம். நிகர்நிலைப் பல்கலைக்கழகம்,*
*வடபழனி வளாகம், சென்னை – 26.*

*ஆய்வுச் சுருக்கம்:*

*பெருமாள்முருகன் காத்திரமான நவீன கவிதைகளை எழுதி வருகின்றார். அதில், அவரின் கோழையின் பாடல்கள் கவிதைப்பிரதி மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஏனென்றால், மாதொருபாகன் நாவல் பிரச்சனைக்குப் பிறகு பெருமாள்முருகன் என்ற எழுத்தாளன் இறந்துவிட்டான். இப்போது இருப்பது வெறும் முருகன் மட்டுமே என்று கூறி, ஒரு விளிம்புநிலை மனிதனின் மனநிலையோடு தன் மரணத்தைத் தானே அறிவித்தார். சிறிது காலத்துக்குப் பிறகு, மீண்டும் பெருமாள்முருகனாக உயிர்த்தெழுந்து வந்து, அவர் எழுதிய பிரதியே கோழையின் பாடலாகும். அப்படிப்பட்ட அவரின் இந்தக் கவிதைத் தொகுப்பைச் சில பின்நவீனத்துவக் கோட்பாட்டுக் கூறுகளோடு பொருத்திப் பார்க்கும் ஒரு முயற்சியே இவ்வாய்வாகும்.*

*முன்னுரை:*

*ஒரு பிரதியை அளவிட்டு மதிப்பிட ஏதேனும் ஒரு கோட்பாட்டு வளையத்துக்குள் அதனைப் பொருத்திப் பார்க்க வேண்டும். அவ்வாறு பொருத்திப் பார்த்து வாசிப்புக்குள்ளாக்கும்போதுதான், வாசகனுக்குப் புதிய பொருள் புலப்பாட்டுத்தன்மைகள் கிடைக்கும். அதுமட்டுமல்லாமல், ஒரு பிரதியைப் பொதுப்புத்தியின் அடிப்படையில் நாம் காலங்காலமாகப் புரிந்துகொள்ளும் நிலைக்கு நேரெதிராகவும், புதிய புதிய அர்த்தத்தளங்களோடும் புரிந்துகொள்ளும் சூழலும் ஏற்படும். வேறு சில புதிய பொருள் தேடலுக்கான முயற்சியாகவே பெருமாள்முருகனின் கோழையின் பாடல்கள் கவிதைப்பிரதிக்குள் பின்நவீனத்துவத்தின் சில கோட்பாட்டுக் கூறுகள் பொருத்திப்பார்க்கப்பட்டுள்ளன. இந்தப் பிரதிக்குள் பின்நவீனத்துவக் கூறுகள் வலுவாகப் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன என்பது இந்த ஆய்வின் கருதுகோளாக உள்ளது. அந்தக் கருதுகோளை நிறுவும்விதமாகவே ஆய்வுக்கட்டுரையின் போக்கு அமைந்துள்ளது.*

*ஆய்வு நெறிமுறைகள்:*

*பெருமாள்முருகனின் கோழையின் பாடல்கள் கவிதைப்பிரதியில் உள்ள கவிதைகள் முதன்மைச்சான்றுகளாகவும், பின்நவீனத்துவக் கோட்பாட்டுக் கூறுகள் துணைமைச்சான்றுளாகவும் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், விளக்கமுறை ஆய்வு, கோட்பாட்டாய்வு முறை, ஒப்பீட்டு ஆய்வு முறை போன்ற ஆய்வு நெறிமுறைகள் இக்கட்டுரையில் பயன்படுத்தப்பட்டுள்ளன,*

அதாவது, பல்லாயிரமாண்டுகளாக எழுதப்படும் கவிதைப்பிரதிகளின் வளர்ச்சி நிலைகளை எடுத்துரைக்கவும், எவ்வாறெல்லாம் பின்நவீனத்துவக் கூறுகள் உட்பொதிந்துள்ளன என்பதைச் சொல்லிடவும் விளக்கமுறை ஆய்வு நெறிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. கவிதையில் பின்நவீனக் கோட்பாடுகள் வீழ்ப்படிவைப்போல் படிந்து கிடக்கின்றன என்பதை விளக்கியுரைக்கக் கோட்பாட்டாய்வு முறை துணை நின்றுள்ளது. நவீனத்துவமும் பின்நவீனத்துவமும் சில இடங்களில் ஒப்பு நோக்கப்பட ஒப்பீட்டு ஆய்வுமுறை பின்பற்றப்பட்டுள்ளது.

*அன்றுதொட்டு இன்றுவரையான கவிதையின் நோக்கும் போக்கும்:*

ஆயக்கலைகள் அறுபத்துநான்கு என்று சொல்வார்கள். அதில், எழுத்தாற்றல் எனும் கலையும் உள்ளடங்கியுள்ளது. அத்தகைய எழுத்தில் முதன்மையான கலையாகக் கவிதை திகழ்கிறது. அந்தக் கவிதைக்கலையும் தொல்காப்பியம் குறிப்பிடும் செய்யுளியலுக்கு உட்பட்டே பன்னெடுங்காலம் இயங்கி வந்தது. சங்க இலக்கியம் பொதுவான மனித உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பதாக இருந்தது. அதற்குப் பிறகு அடுத்தடுத்து வந்த இலக்கியங்களின் போக்குகள் மாறின. இருந்தும் தனிமனிதத் துயரங்களோ, சமூகத்தின் விளிம்பில் இருக்கும் எளியவர்களின் பிரச்சனைகளோ கவிதைப்பரப்பில் எங்குமே பேசப்படவில்லை.

வள்ளலாரின் வருகைக்குப் பிறகுதான் அதுவரை கட்டமைக்கப்பட்டிருந்த மதமெனும் பெருங்கதையாடல் (Meta Narrative) கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. புதுச் சிந்தனை மரபைத் துணிந்து வள்ளலார் முன்வைக்கிறார்.

'சாதியும் மதமும் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்சோதி'

என்று கட்டமைக்கப்பட்ட கட்டமைப்பைக் கட்டுடைப்பு செய்யும் வகையில் வள்ளலார் எழுதினார். மகாகவி பாரதி, வள்ளலாரிடமிருந்தே தனக்கான மொழிக்கொள்கையை உருவாக்கிக் கொள்கிறார். அதாவது, பண்டிதத் தமிழைப் புறந்தள்ளிவிட்டு, எளிய தமிழை ஏந்திக் கொள்கிறார். பாரதியும் ஆரம்பத்தில் ஆசிரியப்பா, வெண்பா, விருத்தம் என்றே எழுதினார். அதன்பிறகான பத்திரிகையுலகத் தொடர்பே பாரதியை யாப்பிலக்கணத்திற்கு அப்பாற்பட்டு சிந்து, கண்ணி, நாட்டுப்புறப்பாடல் போன்ற எளிய வடிவங்களை நோக்கி நகர்த்தியது. அதுமட்டுமல்லாமல், உலக இலக்கிய வாசிப்பே பாரதியைக் காட்சிகள் என்ற வசன கவிதையை எழுதத் தூண்டியது.

*இஸங்களின் வருகையும் பிரதிகளில் ஏற்பட்ட உள்ளடக்க மாற்றமும்:*

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகான காலகட்டம் மனித வாழ்வில் பெரும் அகக்குழப்பங்களையும் தடுமாற்றங்களையும் கொண்டு வந்து சேர்த்தன. சமூகத்தின் அனைத்து மட்டங்களும் ஆட்டம் காணத் தொடங்கின. மனித வாழ்க்கையில் நம்பிக்கை வறண்டு போனது. எதிர்காலம் குறித்த பயங்கள் ஏற்படத் தொடங்கின. நிராசைகளின் வரிசையாக வாழ்க்கை மாறியிருந்தன.

நாம் இதுவரை பின்பற்றி வந்த ஒழுங்குகளே எல்லா துயரங்களுக்கும் காரணம் என்ற எண்ணம் ஏற்படத் தொடங்கியது. ஆகவே, அவற்றை நிர் நிர்மாணம் (Deconstruction) செய்ய வேண்டும் எனப் பின்நவீனத்துவம் அறைகூவல் விடுத்தது. இத்தகைய இக்கட்டான சூழலில்தான் பின்நவீனத்துவம் அதற்கான ஒரு தீர்வாக அப்பொழுது முன்வைக்கப்பட்டது.

மேற்கே / ரொமாண்டிசிஸம்
நாச்சுரலிஸம் / ரியலிஸம்
அப்பால் / இம்பிரஷனிஸம்
என் மனைவிக்கு / தக்காளி ரஸம்
அப்பால் / ஸிம்பலிஸம்
கூபிஸம் / ஸர்ரியலிஸம்
மீண்டும் / வெறும் / ரியலிஸம்

- இலக்கிய வட்டம் செப்டம்பர் 1964

என்று இசங்களைப் பற்றி 'கொள்கை' என்ற தலைப்பில் சுந்தர ராமசாமி ஒரு கவிதை எழுதியிருப்பார். இந்தக் கவிதை புற்றீசல் போல் புறப்பட்டு வருகின்ற இசங்களைக் கிண்டலடிப்பதாக அமைந்துள்ளது. நமக்கு அவை முக்கியமில்லை. இத்தனை விதமான இசங்கள் தோன்றி, தமிழ்க்கவிதைச் சூழலில் பல்வேறு மாற்றங்கள் நிகழக் காரணமாகியுள்ளன என்பதை இக்கவிதையின் மூலம் தெரிந்துகொள்ள முடிகின்றது என்பதாக எடுத்துக் கொள்ளலாம்.

இப்படிப்பட்ட இசங்களின் வருகையால்தான் கவிதை உள்ளடக்கத்தில் மாபெரும் மாற்றம் உருவானது. புதுவிதமான உத்திகளும் மாறுபட்ட வெளியீட்டு முறைகளும் நவீன கவிதைக்குள் பெரும் பாய்ச்சலைப் புகுத்தியது. எத்தனையோ இசங்கள் தமிழ்க்கவிதைக்குள் தாக்கமேற்படுத்தியிருந்தாலும், பின்நவீனத்துவத்தின் வருகைதான் கவிதை என்ற இலக்கியத் தளத்தைத் தலைகீழாக மாற்றி அமைத்தது. அதாவது, ஒரு அதிர்ச்சி அதிரடியைக் கவிதைப்பிரதிக்குள் புகுத்திப் போனது.

*பின்நவீனத்துவத்தின் முன்விளைவுகள்:*

ஒவ்வொரு காலகட்டத்திலும் புதுப்புது சிந்தனைத்துவங்கள் தோன்றி வளர்ந்து வந்திருக்கின்றன. அவை உலகம் முழுவதும் சமூகத்திலும், இலக்கியத்திலும்,வாழ்வியல் முறையிலும் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. அந்தத் தாக்கங்களை அடிப்படையாகக் கொண்டே நாம் சிந்திக்கிறோம். பல்வேறு பிரதிகளை உருவாக்குகிறோம். வாழ்ந்துகொண்டும் வருகிறோம்.

" லியோதார்த் எழுதிய பின்நவீனத்துவ நிலைமை: அறிவின் மீதானதோர் அறிக்கை (The Postmodern Condition: A Report on Knowledge) என்ற நூலுக்கு நல்ல அறிமுகம் உலகம் முழுவதும் கிடைத்தது. அதனால், லியோதார்த் உலகப் புகழைப் பெற்றுக் கொண்டார். அதில், அவர் வெளியிட்ட கருத்துக்கள் இன்றளவும் பின்நவீனத்துவச் சிந்தனையாளர்களின் விவிலிய நூல் போல போற்றப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

1. தர்க்கப்பூர்வமான அறிவியல் கோட்பாடுகளை மறுப்பது
2. காரண காரியங்களை நிராகரிப்பது
3. எதையும் நிச்சயமற்றதாக நோக்குவது
4. எல்லா நம்பிக்கைகளையும் நிர்மூலமாக்குவது அல்லது எதன் மீதும் நம்பிக்கை கொள்ளச் செய்யாமல் மனிதனை நிர்கதியாய் அல்லாட வைப்பது

முதலான சிந்தனைப் போக்குகளே இந் நூலின் சாரமாக விளங்க, இவையே பின்நவீத்துவக் கோட்பாடுகளாகத் தொடக்கம் பெற்று துலக்கம் பெற்றன.''1

அவரைத் தொடர்ந்து ரொலான் பார்த், லாக் லக்கான், மிகைல் ஃபூக்கோ, ழாக் டெரிடா போன்றவர்கள் மையத்தை உடைத்தெறிந்து சிதறல்களை முன்வைத்து புதிய சிந்தனை முறையை உருவாக்கினார்கள். அதன்பிறகே பின்நவீனத்துவம் உலகம் முழுவதும் இதுவரை கட்டமைக்கப்பட்டிருந்த சிந்தனா முறைகளைத் தகர்த்தெறிய துணை நிற்கும் சிந்தனைப்போக்காக இனங்காணப்பட்டது.

*பின் நவீனத்துவத்தின் இலக்கியக் கோட்பாடுகள்:*

பின்நவீனத்துவம் ஓர் அதிர்ச்சி வைத்தியமாகத்தான் நம்முடைய இடத்திற்குள் நுழைகிறது. அதாவது, இலக்கியச் சூழலுக்குள் இடம்பிடிக்கிறது. ஆனால், ஓர் அமைப்புக்குள்ளும், சட்டகத்துக்குள்ளும் அடைபட்டுப் பழக்கப்பட்டுவிட்ட பழமை விரும்பிகளுக்குப் பின்நவீனத்துவம் ஒரு கசப்பு மருந்தாகவே காணப்பட்டது. அதனால், இங்கே மிகக் குறைவான ஆதரவு நிலைப்பாடும், அதிகமான எதிர்ப்பு நிலைப்பாடும் உருவானது. அது இன்றுவரை தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

1. பின்நவீனத்துவம் இலக்கியத்திற்கென வரையறுக்கப்பட்ட எல்லாவிதமான எல்லைகளையும் மீறுகிறது. முந்தைய அடையாளங்களைக் கருணையற்றுக் கலைத்தெறிகிறது.
2. பல்வேறு விதமான வடிவச் சோதனைகளில் ஈடுபடுகிறது. அது பலரால் ஜீரணிக்க முடியாததாக உள்ளது.
3. இந்த உலகத்தில் தோற்றுவிக்கப்பட்ட பல்வேறு கருத்து உருவாக்கங்களின் போதாமையையும், மையத்தையும் மறுத்து அனைத்தையும் பரவலாக்குவதை

அடித்தளமாகக் கொண்டுள்ளது.

இதன் காரணமாகவே, பின்நவீனத்துவம் ஒரு கலகக் கலைக்கோட்பாடாகவே பார்க்கப்படுகிறது. அதன் வருகை பல்வேறு அதிரடித் தன்மைகளையும் அதிர்ச்சிகளையும் தந்தன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அதிலிருந்து பலர் இன்னும் மீளவே இல்லையென்பது மனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

"பின்நவீனத்துவக் காலத்தில் மொழியின் இயல்பான தன்மை என்பது இல்லை. எனவே நாம் கதம்ப படைப்பாக்கத்தைத் தான் உருவாக்க முடியும். பிறர் போல நடித்துக் காட்டுபவர் ஒருவர், போக்கார்ட்டைப் போல் நடிக்கத் தொடங்கி, பிறகு வசனத்தின் மத்தியில் மர்லின் மன்றோ போல் மாறி, பிறகு பாய் ஜியார்ஜ் அல்லது ஜேம்ஸ் டீன் ஆகி, பிறகு ரொனால்ட் ரீகன் மாதிரி ஆகிறார் என்று வைத்துக்கொள்வோம். கதம்பத்தில் இதுபோல மேற்கோள்களின் ஒரு கலப்பு தான் இருக்கிறது. ஒரு டஜன் திரைப்படங்கள் எம்டிவி வீடியோக்கள், தொலைக்காட்சித் தொடர்கள் போன்றவற்றை எவ்வித முறைமையும் இன்றி ஆங்காங்கு வெட்டி ஒட்டினாற்போல் தான் நம் படைப்புகள் தொடர்ந்து இருக்கின்றன.''2

எல்லாவற்றையும் கலைத்துப்போட்டு பன்மைகளின் கூடாரமாக மாற்றுவதே பின் நவீனத்துவமாகும். கலைடாஸ்கோப்பில் தெரிவதைப் போல, பிசுபிசுத்த, எந்தவித ஒழுங்குக்குள்ளும் அடக்கிவிட முடியாத கலைவடிவத்தையே பின்நவீனத்துவம் முன் நிறுத்துகிறது. ஆகையால், வரையறுக்க முடியாத சிதறல்களாகவே பின்நவீனத்துவத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

கோழையின் பாடல்களில் குழைந்துகிடக்கும் பின்நவீனத்துவச் சாரங்கள் :

ஒழுங்கவிழ்ப்பு:

"மரபுவழிப்பட்டு மட்டும் சிந்திக்கிறவர்கள் பரம்பரை பரம்பரையாகக் கைமாற்றித் தரப்படும் இந்த அறிவை அப்படியே ஏற்று அதையே உண்மையான அறிவென்று நம்பி அதன்படி நடந்து என்றென்றைக்கும் ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டவர்களாகவும் அதற்குச் சேவை செய்பவர்களாகவும் இருந்து வருகிறார்கள்.''3

இப்படியாக ஒழுங்கமைக்கப்பட்ட அறிவை ஒழுங்கவிழ்ப்பு செய்யும் போதுதான் புதுவிதமான மாற்றங்கள் உருவாகும். பழமையில் மூழ்கிப்போன சமூகம் புதுமைக்குக் தயக்கம் காட்டியே இயங்கிக் கொண்டிருக்கும். ஆகையால், அதை உடனடியாக ஒழுங்கவிழ்ப்பு செய்வதே பின்நவீனத்துவத்தின் போக்காக உள்ளது.

" நாட்களின் பெயர்கள்
பழமையின் சிதிலமாகிவிட்டன
மொழிக் கிடங்கிலிருந்து
புதுச்சொற்களைச் சுண்டியெடுத்துச் சூட்டலாம்
வாரம் மாதம் ஆண்டு என்னும்
எல்லா கணக்குகளும் காலாவதியாகிப் போகும்
நாள் என்பதுகூட''4

என "நாட்களின் பெயர்கள்'' என்று ஒரு கவிதையுள்ளது. பெருமாள்முருகன் இக்கவிதையில், உலகம் தோன்றிய நாளிலிருந்து உருவாக்கி வைத்திருந்த நாள், வாரம், மாதம், ஆண்டு ஆகிய கால ஒழுங்கமைவை ஒழுங்கவிழ்ப்பு செய்துள்ளார். ஆகையால், இக்கவிதையில் பின்நவீனத்துவச் சாரம் இடம்பெற்றுள்ளது.

நாள், கிழமை, நல்ல நேரம் கெட்ட நேரம் என்றெல்லாம் ஒன்றுமில்லை என்பதே பின்நவீனத்துவத்தின் கருத்தாக்கமாகும். இந்த நேரத்துக்குள் இதைச் செய்ய வேண்டும்; அந்த நேரத்துக்குள் அதைச் செய்ய வேண்டும் என்று மனிதர்களின் அன்றாடங்களை முடிவு செய்வதே வன்முறை என்று பின்நவீனத்துவம் முன்மொழிகிறது. அதையே, பெருமாள்முருகன் தன் கவிதையில் வழிமொழிகிறார்.

விளிம்புநிலைவாசிகளின் இருப்பு:

"பின்நவீனத்துவம் என்ன சொல்கிறது? முதலாளிய அரசின் வரலாறும் பெருந்தையாடல். தொழிற்சங்க வரலாறும் போராட்டங்களும் பெருகதையாடல். எனவே, இதையெல்லாம் விடுத்து, விளிம்பு நிலை மக்கள், திருடர்கள், வழிப்பறிக் கொள்ளையர்கள்,

விபச்சாரம் செய்வோர், சூதாடிகள், போதை மருந்து விற்போர் முதலான உதிரி மக்கள் பிரிவினர் பற்றிய நுண்கதையாடல் நிகழ்த்த வேண்டும் என்று பின்நவீனத்துவம் கூறுகிறது.''5

பொருட்படுத்தப்படாமல் புழுதியில் கிடக்கும் எளிய மனிதர்களையும் பிரதிகளில் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். இழிவுகள் ஒதுக்கப்பட வேண்டியவை அன்று. அவற்றின் சாராம்சமும் பதிவாக்கப்பட வேண்டுமென வலியுறுத்துவதே பின்நவீனத்துவத்தின் நோக்கமாகும்.

"உழைப்பால் உயரலாம் வா இங்கே
படித்து வளரலாம் வா இங்கே
நிறைந்த வேலை குறைந்த ஊதியம் / வா இங்கே
மாதமொருநாள் ஊதியமில்லா விடுப்பு / வா இங்கே
கோழிப்பீ அள்ளலாம் வா இங்கே
ராடு தூக்கலாம் வா இங்கே
மேஜை துடைக்கலாம் வா இங்கே
கைப்பசை இருந்தால் வா இங்கே
வகுப்பறைக்குள் அமரலாம் வா இங்கே
பணியாட்கள் வாழலாம்
அடிமைகள் வாழலாம்''6

என்ற கவிதை விளிம்புநிலை மனிதர்கள் செய்யும் வேலைகளைப் பட்டியலிடுகிறது. கோழிப்பீ அள்ளுவது, ராடு தூக்குவது, மேசை தூக்குவது போன்றவை பிரதியில் இடம்பெறுவதே பின்நவீனத்துவப் பாதிப்பெனக் கொள்ளலாம்.

பிரதி ஆசிரியரின் மரணமும் விளையாட்டுத்தனமும்:

"பின்நவீனத்துவம் இலக்கிய படைப்புகளைக் கலையாகப் பார்க்காமல் பிரதியாகவே பார்க்கிறது. அதோடு மட்டுமல்ல, அந்தப் பிரதியை உருவாக்கியதோடு அதை உருவாக்கியவன் மரணம் அடைந்து விடுகிறான் என்றும் அதன் பிறகு அப்பிரதியை ஒவ்வொரு வாசகனும் தன் விருப்பம் போல வாசித்துச் செல்கிறான் என்றும் சொல்கிறது. பின்நவீனத்துவம் இலக்கியத்தில் கோட்பாடுகளின் படைப்பாளியின் மரணத்தை, விமர்சனங்களின் மரணத்தை அறிவித்தது. படைப்பு என்பது தொடர்ச்சியான நேர்கோடான ஒன்றுக்கொன்று தொடர்புடைய தருக்கத்திற்கான சம்பவங்கள் நிகழ்வுகளின் தொடர்ச்சி அல்ல மாறாக அது தாறுமாறானதும் திட்டமிடப்படாததுமான ஒரு நிகழ்வு என்றும் சொல்கிறது பின்நவீனத்துவம். இதனையொட்டியே நேர்வரிசை ஒழுங்கற்றதென அழைக்கப்படும் இலக்கியம் பிறப்பெடுத்ததாகவும் கொள்ளலாம்.''7

பெரும் பொருட்புலப்பாடுகளைப் பிரதிகள் தரத் தேவையில்லை; பிரதிகளில் லட்சிய நோக்குகள் அவசியமில்லை; மேலோட்டமான, விளையாட்டுத்தனமான போக்குகளே போதுமானது எனப் பின்நவீனத்துவம் கூறுகிறது.

"போதும் போதும் / கொடுத்தது போதும் போதும்
போதும் போதும் / எடுத்தது போதும் போதும்
போதும் போதும் / இருப்பதை விடு
இருக்கும்படி விடு / இருக்க விடு / விடு விடு
விட்டு விடு விடு / போதும் போதும்
எல்லாம் போதும் / போதும் போதும்
போ தும் போ தும் / போ தும்
போ / தும் / போ போ / தும் தும் தும்/
தும் தும் தும் / தும் / ம் / ம்ம் / ம்ம்ம்.'' 8

என்று முடியும் இந்தக் கவிதையில் பின்நவீனத்துவம் குறிப்பிடும் அம்சங்கள் இடம்பெற்றுள்ளது. தீவிரமாக எதையோ சொல்ல முனைவதைப் போல ஆரம்பித்து, விளையாட்டுத்தனமாக முடிந்துள்ளது. கவிதையென்றால், எதையாவது முடிவில் சொல்ல வேண்டும் என்ற மரபை உடைத்துப் பின்நவீனத்துவ ஆன்மாவோடு இக்கவிதை பெருமாள்முருகனால் எழுதப்பட்டுள்ளது.

போ தும்,தும் தும், ம், ம்ம், ம்ம்ம் என முடியும் கவிதை விளையாட்டுத்தனத்தின் உச்சமெனக் கொள்ளலாம். எதையும் சொல்லலாம். நவீனத்துவம் கற்பிக்கும் தீவிரத்தன்மையெல்லாம் கவிதைப்பிரதிக்குத் தேவையில்லை என்று பெருமாள்முருகனின் இந்த வரிகள் சொல்லாமல் சொல்கின்றன. பின்நவீனத்துவ மனநிலையின் வெளிப்பாடே இக்கவிதையெனலாம்.

*ஆய்வின் நிறைவுரை:*

கடந்த அரை நூற்றாண்டாகப் பின்நவீனத்துவத்தின் பாதிப்போடுதான் தெரிந்தோ தெரியாமலோ நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆகையால், இந்தக் காலத்தைப் பின்நவீனத்துவக் காலமாகவே எடுத்துக் கொள்ளலாம்.

மனச்சிதறலுக்கு ஆளான, மனக்குமுறலுக்கு ஆளான ஒரு கைவிடப்பட்டவனின் மனநிலையை எடுத்துரைப்பதாகக் கோழையின் பாடல்கள் என்ற இப்பிரதி எழுதப்பெற்றுள்ளது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், பெருமாள்முருகனின் கோழையின் பாடல்கள் கவிதைத் தொகுப்பில் பல்வேறு இடங்களில் பரவலாகப் பின்நவீனத்துவத்தின் கோட்பாட்டியல் பண்புக்கூறுகளைக் காண முடிகிறது.

ஒரு அலங்கோல ஆன்மாவின் பிரதி பிம்பமாக இப்பிரதியில் உள்ள சில கவிதைகள் சுற்றிச் சுழல்கின்றன. சரணாகதி என்ற தலைப்பிலமைந்த கவிதையெல்லாம் நிர்கதி மனநிலையின் நிலைப்பாடாகவே கருதலாம். "உங்கள் கண்ணெதிரே / நீங்கள் கொல்லப்பட்ட நாள்'' என்று தன் மரணத்தைத் (பிரதி ஆசிரியனின் மரணமாகவும் கொள்ளலாம்) தானே சொல்லும் " ஒரே ஒரு நாள் '' எனும் தலைப்பிலமைந்த வரிகளில் பின்நவீனத்துவக் கூறுகள் நிரம்பி வழிவதைக் காணலாம்.

இவ்வாறாக, இதில் பயன்படுத்தப்பட்டுள்ள கவிதைகளின்றி வேறு சில கவிதைகளிலும் பின்நவீனத்துவச் சாரங்களைக் காண முடிகின்றது. அதிகாரம் என்னும் பெருங்கதையாடல் தன் அகத்தை எப்படியெல்லாம் சீரழித்தது என்பதைப் பின்நவீனத்துவ மனோநிலை பிரதிபலிக்கும்படி மிகுந்த பட்டவர்த்தனமாகக் கோடிட்டுக் காட்டியுள்ளார். பின்நவீனத்துவம் விளிம்பியலாளர்களைப் பெரிதும் கரிசனத்தோடு தூக்கிப்பிடிக்கும். அந்தவகையில், பெருமாள்முருகனின் நிராதரவு மனநிலை நிரம்பி வழியும் இக்கவிதைப் பிரதியைப் பின்நவீனத்துவப் பிரதியாகவே அறிவிக்குமளவுக்கு எழுதப்பட்டுள்ளது.

*உதவிய நூல்கள்:*

1. அஸ்வகோஷ், பின்நவீனத்துவம் பித்தும் தெளிவும்,மங்கை பதிப்பகம்,பக்.16
2. க.பூர்ணச்சந்திரன்,பின்நவீனத்துவம் தொடக்க நிலையினருக்கு, அடையாளம்,பக்.39
3. அஸ்வகோஷ்,பின்நவீனத்துவம் பித்தும் தெளிவும்,மங்கை பதிப்பகம்,பக்.33
4. பெருமாள்முருகன்,கோழையின் பாடல்கள்,காலச்சுவடு பதிப்பகம்,பக்.26
5. அஸ்வகோஷ்,பின்நவீனத்துவம் பித்தும் தெளிவும்,மங்கை பதிப்பகம்,பக்.188
6. பெருமாள்முருகன்,கோழையின் பாடல்கள்,காலச்சுவடு பதிப்பகம்,பக்.190
7. அஸ்வகோஷ்,பின்நவீனத்துவம் பித்தும் தெளிவும்,மங்கை பதிப்பகம்,பக்.134
8. பெருமாள்முருகன்,கோழையின் பாடல்கள்,காலச்சுவடு பதிப்பகம்,பக்.145

********* ********* ********** ********* ********* ********** ********** **********